# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2126/6 - 2019 ජුනි මස 03 වැනි සඳුදා - 2019.06.03

*2126/6 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 1/ 2012* (III)

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டம்**

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (குஅ) மற்றும் (குஆ) என்னும் பிரிவுகளின் கீழ் கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

பீ. ஹரிசன்,<br>
கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள்,<br>
கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில்<br>
மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,<br>
*2019, யூன் 05.*

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2019 ஆம் ஆண்டின் படகோட்டிகளுக்கான தகுதிச் சான்றிதழ்களை வழங்குதல் (உள்நாட்டு மீன்பிடிப் படகுகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. பத்துத் தசம் மூன்று மீற்றர்களுக்கு (10.3மீ.) குறையாத நீளத்தைக் கொண்ட பல்தின உள்நாட்டு மீன்பிடிப் படகுகளின் படகோட்டிகளாகச் சேவையாற்றுவதற்கு விண்ணப்பிக்கின்ற ஆட்களுக்கு இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும்.

3. (இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட தகுதிச் சான்றிதழொன்றை அல்லது அந்நோக்கத்துக்காக ஏற்றங்கீகரிக்கப்பட்ட கடலோரப் பயிற்சி நிறுவகமொன்றினால் வழங்கப்பட்ட கப்பலோட்டி உரிமமொன்றைப் பெற்றுக் கொள்ளாமல் ஆளெவரும் மேற்குறிப்பிடப்பட்ட அளவுக் குறிப்பீடுகளைக்கொண்ட பல்தின உள்நாட்டு மீன்பிடிப் படகில் படகோட்டியொருவராகச் சேவையாற்றுதலாகாது.

4. மூன்றாம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடு செய்யப்பட்ட தகுதிச் சான்றிதழொன்றுக்காக விண்ணப்பிக்கின்ற எவரேனுமாள்-

(அ) விடயத்துக்கேற்ப, இயைபான எழுத்துமூலமான அல்லது வாய்மொழிமூலமான பரீட்சை எத்திகதியன்று நடைபெறவுள்ளதோ அத்திகதியிலுள்ளவாறு பதினெட்டு (18) வயதுக்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும்;

(ஆ) ஒன்றில் படகோட்டியொருவராக அல்லது கப்பற்றொகுதி உறுப்பினரொருவராக மேலே குறிப்பீடு செய்யப்பட்ட பல்தின உள்நாட்டு மீன்பிடிப் படகொன்றில், கடலில், இரண்டாண்டுகளுக்கு (2) குறையாத அனுபவத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிறுவகத்திடமிருந்து, ஒருவாரத்துக்கு (01) குறையாத காலநீட்சியைக் கொண்ட மீன்பிடிக் கலப் படகோட்டிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தைப் பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும்.

5. தகுதிச் சான்றிதழொன்றுக்காக விண்ணப்பம் பின்வரும் ஆவணங்களுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும் :-

(அ) விண்ணப்பக்காரரின் செவிப்புல, கட்புல நிலைமையுட்பட, ஏற்றங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழிலாளரொருவரினால் அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட மருத்துவ நிறுவகமொன்றினால் வழங்கப்பட்ட தகுதிச் சான்றிதழொன்று;

(ஆ) பின்வரும் நிறுவனங்களுள் ஏதேனுமொன்றினால் வழங்கப்பட்ட தகுதிச் சான்றிதழொன்று; அதாவது,-

(i) 2014 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, இலங்கைச் சமுத்திரப் பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைச் சமுத்திரப் பல்கலைக்கழகம் ;

(ii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் பட்டமளிக்கும் நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட கொழும்பு சர்வதேசக் கடலோட்டு மற்றும் பொறியியற் கல்லூரி ;

(iii) 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மஹாபொல பயிற்சி நிறுவனம் ; அல்லது

(iv) பணிப்பாளர் தலைமையதிபதியினால் அந்நோக்கத்துக்காக ஏற்றங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகம் ;

விண்ணப்பகாரர் ஒருவாரத்துக்கு (1) குறையாத காலப்பகுதியொன்றுக்கு ஒரு மீன்பிடிக் கலத்தின் படகோட்டியொருவராக வெற்றிகரமானமுறையில் பயிற்சிக்குட்பட்டுள்ளாரென இச்சான்றிதழ் சான்றுப்படுத்துதல் வேண்டும் ; அத்துடன்

(இ) மீன்பிடி முறைகள், கடலிற் செல்லுதல், வானொலித் தொடர்பாடல், சொந்தக் காப்பு மற்றும் உயிர் காப்பாற்றுதல், தீத்தடுப்பு, தீயணைத்தல், கடலில் அவசரகால முதலுதவி, ஆழ்கடலில் மீன்பிடித்தலின் சர்வதேசக் கடப்பாடுகள் மற்றும் கடல்சார் தீழ்ப்பைத் தடுத்தல் என்பனவுட்பட, விண்ணப்பகாரர் போதிய பயிற்சிக்குட்பட்டுள்ளாரென எண்பிப்பதற்கான ஓர் ஆவணம் அல்லது ஆவணங்கள்.

6. இவ்வொழுங்குவிதிகளின் கீழ் தகுதிச் சான்றிதழ் ஒன்றுக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டுமென்பதுடன், இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தலும் வேண்டும்.

7. தகவுடைய ஒவ்வொரு விண்ணப்பகாரருக்கும், விடயத்துக்கேற்ப, வாய்மொழிமூலமான அல்லது எழுத்துமூலமான பரீட்சைபற்றிய இடமும் திகதியும், அத்தகைய திகதிக்குக் குறைந்தபட்சம் ஒருவாரத்துக்கு முன்னரேனும் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

*8. பணிப்பாளர் தலைமையதிபதி, காலத்துக்குக்காலம், இவ்வொழுங்குவிதிகளின் கீழ் நடாத்தப்படவேண்டிய விடயத்துக்கேற்ப, வாய்மொழிமூலமான அல்லது எழுத்துமூலமான பரீட்சையின் உயர் தராதரங்களைப் பேணுவதற்கென, அத்தகைய பரீட்சைக்கு ஏற்புடையற்பாலதான பாடவிதானத்துக்கான திருத்தங்களைச் செய்யலாம்.*

*9. பணிப்பாளர் தலைமையதிபதி, விடயத்துக்கேற்ப, வாய்மொழிமூலமான அல்லது எழுத்துமூலமான பரீட்சையில் பரீட்சார்த்தி தேவைப்பட்ட தராதரத்தை எய்தியுள்ளாரெனத் திருப்திப்படுவதன்மேல், அத்தகைய பரீட்சையிலிருந்து இருவாரக் காலப்பகுதியினுள் சித்தியடைந்த பரீட்சார்த்திக்குத் தகுதிச் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.*

*10. பணிப்பாளர் தலைமையதிபதி, இதற்கான அட்டவணை* II *இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலான படகோட்டி உரிமமொன்றை, இதற்கான அட்டவணை* III *இல் குறிப்பீடு செய்யப்பட்ட உரிமக் கட்டணத்தைக் கொடுப்பனவு செய்வதன்மேல் 9 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட தகுதிச் சான்றிதழை பெற்றுக்கொண்ட எவரேனும் விண்ணப்பகாரருக்கு வழங்குதல் வேண்டும்.*

*11. வாய்மொழிமூலமான அல்லது எழுத்துமூலமான பரீட்சையில் தேவைப்பட்ட தராதரங்களை எய்துவதற்கு இயலாதுள்ள எவரேனும் பரீட்சார்த்திக்கு, ஒழுங்குவிதி 5(ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட நிறுவனங்களுள் எவற்றிலும் பயிற்சிக்குட்படுவதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் மேலதிகக் காலப்பகுதியொன்று வழங்கப்படலாம் என்பதுடன் அத்தகைய பரீட்சார்த்திக்கு அத்தகைய வாய்மொழிமூலமான அல்லது எழுத்துமூலமான பரீட்சைக்காக அமர்வதற்கு இரு சந்தர்ப்பங்கள் மட்டுமே அளிக்கப்படுதலும் வேண்டும்.*

*12. இவ்வொழுங்குவிதிகளில் -*

*"படகோட்டி" என்பது, ஒரு மீன்பிடிக் கலத்தின் ஏவுகையைக் கொண்டுள்ளவரும், மார்க்கம், மீன்பிடியின் மதிப்பீடு மற்றும் படகின் வேலையாளர்களையும் கப்பற்றொகுதியினரையும் முகாமை செய்தல் பற்றிய அறிவுறுத்தல்களை வழங்குபவருமான ஆள் என்று பொருளாகும் என்பதுடன், ஒரு மீன்பிடிக்கலத்தில் அதே தன்மையில் சேவையாற்றுகின்ற ஒரு கப்பற்றலைவரையும் அல்லது கபிதானையும் உள்ளடக்கும்.*

## அட்டவணை I

### கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் திணைக்களம்

படகோட்டி உரிமத்தைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பம்

| விண்ணப்பகாரரின் வர்ணப் புகைப்படம் ஒன்றை இங்கு ஒட்டவும்<br><br>ஒரு புகைப்படத்தை இத்துடன் இணைக்கவும்<br><br>(3.5 செ. மீ. x 4.5 செ. மீ.) |
|---|

1. முழுப்பெயர் :.............................................................................................................(சிங்களத்தில்)

2. முழுப்பெயர் (ஆங்கிலத்தில்) :

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |

3. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |

4. முகவரி (சிங்களத்தில்) :.............................................................................................................

5. முகவரி (ஆங்கிலத்தில்) :.............................................................................................................

6. தேசிய அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

(தேசிய அடையாள அட்டையின் நிழற்படப் பிரதியொன்றை இத்துடன் இணைக்கவும்.)

7. குடியியல் அந்தஸ்து :.............................................................................................................

8. பிறந்த திகதி : ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

9. தொலைபேசி இலக்கம் : செல்லிட -

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

நிலையான -

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

10. கல்வித் தகைமைகள் :
(i) க. பொ. த. (சாதாரண தரம்) [ ]

(ii) க. பொ. த. (உயர் தரம்) [ ]

(iii) ஏனைய தகைமைகள் :..............................................................

11. படகோட்டிப் பயிற்சிநெறி பற்றிய விபரங்கள் :

(i) கற்கைநெறியின் பெயர் :..................................................................................................................................

(ii) கற்கைநெறி எந்த நிறுவகத்தில் பின்தொடரப்பட்டதோ அந்த நிறுவகத்தின் பெயர் :.................................................

.......................................................................................................................

(iii) பயிற்சிக் காலப்பகுதி :.................................................................................................................................

(iv) பயிற்சிச் சான்றிதழ் பெறப்பட்ட திகதி :.........................................................................
(பயிற்சிச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றை இணைக்கவும்.)

12. படகோட்டி உரிமத்துக்கான கொடுப்பனவுகள் பற்றிய விபரங்கள் :-

(i) பற்றுச்சீட்டு இல. :...............................................................................

(ii) திகதி :........................................................................................

(iii) செலுத்திய தொகை :...........................................................................
(இயைபான பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை இணைக்கவும்.)

13. விண்ணப்பதாரரின் அத்தாட்சிப்படுத்துகை :

என்னால் தரப்பட்ட மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் சான்றுப்படுத்துகின்றேன் என்பதுடன் இத்துடன் உள்ள பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஆழ் கடல் மீன்பிடித் தொழிற்பாடுகளுக்கான நிதி நிபந்தனைகளுக்கமைய எவ்வித சட்டவிரோத மீன்பிடிச் செயற்பாட்டிலும் நான் ஈடுபட மாட்டேன் எனவும் உடன்படுகின்றேன்.

...............................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :................................

14. கடற்றொழில் பரிசோதகரின்/வெளிக்கள அலுவலரின் சான்றுப்படுத்துகை :

இவ்விண்ணப்பத்தைக் கொடுத்துதவுகின்ற திரு. ..................................... என்பவர், முனைப்பான கடற்றொழிலர் ஒருவரென்றும் விதிமுறைப்பட்ட பயிற்சியை அடுத்துப் பின்னர் மீன்பிடிப் படகுப் படகோட்டியாகச் செயலாற்றுவதற்கு அவர் தேர்ச்சி பெற்றுள்ளாரென்றும்/ பெற்றுக்கொள்ளவில்லையென்றும் சான்றுப்படுத்தி இவ்விண்ணப்பத்தை இத்தால் அனுப்பிவைக்கின்றேன்.

| ................................ | .............................................. | ......................................... |
|---|---|---|
| திகதி | கடற்றொழில் பரிசோதகரின்/வெளிக்கள அலுவலரின் கையொப்பமும் அலுவலக முறையான இலச்சினையும். | பிரிவு |

15. விதப்புரை :

உதவிப் பணிப்பாளரின் விதப்புரை :

இந்த விண்ணப்பத்தைக் கொடுத்துதவுகின்ற விண்ணப்பதாரர் கறுப்புப்பட்டியலில் இடப்பட்டுள்ளார்/இடப்படவில்லை எனவும் விண்ணப்பத்தை அவசியமான நடவடிக்கைக்காக நான் விதந்துரைத்து அனுப்பி வைக்கின்றேன்/விதந்துரைத்து அனுப்பி வைக்கவில்லையெனவும் விதந்துரைக்கப்படுகின்றது (அவசியமற்ற சொற்களைக் கீறிவிடுக.)

....................................................
உதவிப் பணிப்பாளரின் கையொப்பமும் அலுவலக முறையான இலச்சினையும்.

திகதி :................................................

16. படகோட்டி உரிமத்துக்கான அனுமதியை முடியும்/முடியாது.

....................................................
நிர்வாக சேவை அலுவலரின் கையொப்பமும் இலச்சினையும்.

திகதி :................................................

## அட்டவணை II

### படகோட்டி உரிமம்

(புகைப்படம்)

(3.5 செ.மீ. x 4.5 செ.மீ.)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு

(இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட மீன்பிடிக் கலத்துக்கு மட்டுமே செல்லுபடியாகும்.)

இலங்கை இல. -

பெயர் -

முகவரி -

தே. அ. அ. இல. -

பிறந்த திகதி -

வழங்குகைத் திகதி - முடிவுறுகைத் திகதி -

பணிப்பாளர் தலைமையதிபதி,
கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் திணைக்களம்,
இலங்கை.

நியதிகளும் நிபந்தனைகளும்

* 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழான பின்வரும் விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் கலத்தின் படகோட்டி இணங்கியொழுகுதல் வேண்டும்.
    * பதிவிலக்கமும் வானொலி அழைப்புச் சைகையும் கலத்தில் அடையாளமிடப்படுதல் வேண்டும்.
    * கலத்திலுள்ள மீன்பிடிக்கருவிகள் அடையாளமிடப்படுதல் வேண்டும்.
    * செல்லுபடியான படகுப் பதிவுச் சான்றிதழும் மற்றும் தொழிற்பாட்டு உரிமமும் அல்லது சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளும் நடப்புக் குறிப்பேடும் கலத்தில் இருத்தல் வேண்டும்.
    * கலத்திலுள்ள செவுள் வலைகள் நீளத்தில் 2.5 கி. மீற்றரை விஞ்சுதலாகாது.

படகோட்டி

* நடப்புக் குறிப்பீட்டைத் தகுந்த முறையில் பேணுதலும் ஒவ்வொரு மீன்பிடிப் பயணத்தின் பின்னரும் துறைமுகத்திலுள்ள அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடம் அதனைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.
* ஏனைய கரையோர அரசுகளின் பிரத்தியேக பொருளாதார வலயங்களில் மீன்பிடித்தலாகாது.
* போரடிக்குஞ் சுறா இனங்கள், சமுத்திர வெண்ணுனிச் சுறா, திமிங்கிலச் சுறா மற்றும் கடல்சார் பாலுட்டிகளைப் பிடித்தலோ, கலத்தில் வைத்திருத்தலோ, தரையிறக்குதலோ மற்றும் கப்பலில் மாற்றியேற்றலை நிறைவேற்றுதலோ ஆகாது.
* கடலில் அல்லது துறைமுகத்தில் சோதனையிடுவதற்காக உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுக்கு உதவுதல் வேண்டும்.

(கடற்றொழில் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நெறிகள் தொடர்பில் மட்டுமே படகோட்டி உரிமம் வழங்கப்படுகின்றது.)

**அட்டவணை III**

| | | | |
|---|---|---|---|
| *1.* | *ஒரு படகோட்டி உரிமத்தின் வழங்குகைக்காக விதந்துரைக்கப்பட்ட கட்டணம்* | - | *ரூபா 350/-* |
| *2.* | *அதன் இணைப்பிரதியின் வழங்குகைக்காக விதந்துரைக்கப்பட்ட கட்டணம்* | - | *ரூபா 450/-* |

*06 - 510*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*